முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

**L.A.O.P. No.22/2022**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

1969 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**கோ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்வர்தீன் | தந்தையார் பெயர் | முஹமது மெய்தீன் |
| கிராமம் | கொடிக்கால்பாளையம் | வட்டம் | திருவாரூர் |
| தொழில் | | வயது | 56 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவில் கோரிக்கையாளர். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பனங்குடி கிராமத்தில் உள்ள எனக்கு சொந்தமான சொத்தை நெடுஞ்சாலை

SELVA MUTHU KUMARI — Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:42:42 +0530

துறையால் கையப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. நன்னிலம் தாலுகா, பனங்குடி கிராமத்தில் பொது காரியத்திற்காக மாநில நெடுஞ்சாலை துறை மயிலாடுதுறை-திருவாரூர் சாலையை பராமரிக்கவும் மக்களின் போக்குவரத்தை எளிதாக்கவும் சென்னை-கன்னியாகுமரி தொழில்தட சாலைகள் திட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்யப்பட்டது. இதற்காக நாளிதழ்களில் மேற்படி திட்டம் சம்மந்தமாக பிரசுரம் செய்யப்பட்டது என்றால் சரி. மறுவாழ்வு மற்றும் மறு குடியமைவிற்கான நிதிகளின்படியும் சென்னை கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை படியும் சுற்றறிக்கையில் கண்டுள்ள அறிவுரைகளின்படியும் உரிய முறையில் நிலம் மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், நில எடுப்பு பகுதியில் காணப்படும் மரங்களுக்கான மதிப்பு அதன் தொடர்புடைய வனத்துறை, வேளாண்மை துறை மற்றும் தோட்டக் கலை அலுவலரிடமிருந்து பெறப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டது. நிலம் எடுக்கும் பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கான மதிப்பு சென்னை பொதுபணித்துறை முதன்மை பொறியாளர் (கட்டிடங்கள்) அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. மேற்படி நில மதிப்பீடாக RS No.73/7B ல் சதுர மீட்டர் 31 க்கு ரூ.58,606.43 ஆகவும் RS No.73/6 ல் சதுர மீட்டர் 3 க்கு ரூ.5,671.59 ஆக நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கு Solatium 100% ஆகவும் 12%

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:42:49 +0530

கூடுதல் சந்தை மதிப்பு ரூ.43,62,957/- ம் சேர்த்து எனக்கு வரப்பெற்று அதை நான் பெற்றுள்ளேன் என்றால் மேற்படி தொகை என் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. ஒரு சதுர மீட்டருக்கு ரூ.40,000/- கேட்பது மிக அதிகம் என்றால் தவறு. 3 வருடங்களுக்கு முன்னாள் உள்ள காலகட்டத்தில் உள்ள வழிகாட்டு மதிப்பில் அதே வகைபாடு நிலத்திற்குரிய மதிப்பினை பரிசீலனை செய்யப்பட்டு நிலத்திற்கு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிலம் அரசால் பொது மக்களின் சேவைக்காக எடுக்கப்பட்டது எனவும் சரியான தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் நான் கோரியுள்ள தொகை அதிகம் எனவும் சொன்னால் தவறு. 3 வருட காலத்திற்கு அதிகமாக விற்பனை செய்ததற்கான தஸ்தாவேஜூக்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தவறு. இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:42:55 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.